தென்றல்

“போற்றுபவர் போற்றட்டும் ;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !”

ஆசிரியர் : கண்ணதாசன்

ஆண்டு சந்தா ரூ. 6—0—0
6 மாதச் சந்தா ரூ. 3—0—0

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: ‘தென்றல்’ சென்னை-6

மலர் 1	சென்னை	21—5—55	சனிக்கிழமை	இதழ் 47

கோட்டைக்குள்ளே குத்து வெட்டு !

கடந்த பொதுத்தேர்தலின்போது திருவாங்கூர் - கொச்சியிலும், ஆந்திரப் பிரதேசத்திலும், அய்தராபாத்திலும் கம்யூனிஸ்டுகள் சிறந்த வகையில் வெற்றி பெற்றனர். அதுபோது அடுத்த பொதுத்தேர்தலுக்குப்பின் கம்யூனிஸ்டு ஆட்சி அப்பிரதேசங்களில் ஏற்பட்டுவிடும் போலும் என்று பொதுவாகக் கருதப்பட்டது. அண்மையில் பொதுத்தேர்தலுக்குப்பின் நடைபெற்ற மறுதேர்தலில், நேர்மைக்குப் புறம்பான வழிகளை ஓரளவு கையாண்டதன்மூலம் காங்கிரஸ் மீண்டும் திரு-கொச்சி ராஜ்ய ஆட்சி லகானைக் கைப்பற்றிவிட்டது; ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள் படுதோல்வியடைந்தனர். அய்தராபாத்திலும், மக்கள் ஜனநாயக முன்னணியின் சீரழிவால் தற்சமயம் காங்கிரஸுக்கு எதிர்க்கட்சியின் தொல்லையில்லை.

ஆவடி மாநாட்டுக்குப் பின்னர், உதிரிக்கட்சிகளுள் முக்கியமான என். ஜி. ரங்காவின் கிருஷிகர் லோக் கட்சியும், முன்னேற்றக்கட்சியும் அரசியல் வானிலிருந்து மறைந்துவிட்டன. ஆந்திராவில் மட்டும் ஓரளவு வலுவுள்ளஸ்தாபனமாக கிருஷிகர் லோக் கட்சி விளங்கிற்றெனினும், புதிய ராஜ்யத்தில் அதனுடைய எதிர்ப்பை சமாளிக்க வேண்டிய அவசியம் இல்லா தொழிந்தது, அக்கட்சி காங்கிரஸுடன் ஐக்கியமாகிவிட்ட காரணத்தால். ஆகவே கிருஷிகர் லோக் கட்சியின் அஸ்தமனம் நிச்சயமாகக் காங்கிரஸுக்கு இலாபகரமானதே காங்கிரஸ் தலைவர்களாயிருந்த பழைய கொள்கையாளருடன் வங்க வீரர் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களுக்கு ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் காரணமாகவே முன்னேற்றக்கட்சி தோற்றுவிக்கப்பட்டது. தலைவர் மறைவுக்குப்பின் அக்கட்சி சுபாஸீயப் பிரிவு என்றும், மார்க்சீயப் பிரிவு என்றும் இரு கூறுகளாகப் பிரிந்தது. சுபாஸீயப்பிரிவு சென்ற ஆண்டில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியுடன் கலந்துவிட்டது. தற்போது மார்க்கசீயப் பிரிவின் பெரும்பகுதி காங்கிரஸ் கட்சியின் அரவணைப்பில் சிக்கிவிட்டது காங்கிரஸுடன் ஐக்கியமாவதைஎதிர்த்து வரும் முன்னேற்றக் கட்சியினர்-பெரும்பாலோர் மேற்குவங்கத்தைச் சேர்ந்தவர்—கம்யூனிஸ்டுகளின் பாதையில் போய்ச் சேரும் நிலை வெகு தூரத்திலில்லை.

கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரையில்,அவர்கள் சில குறிப்பிட்ட இடங்களிலாவது காங்கிரஸ் கட்சிக்கு சமாளிக்கமுடியாத எதிர்ப்பை உருவாக்கக் கூடியவர்களென்றஎண்ணமும், அரசியல் சக்திகளை வலதுசாரி இடதுசாரி என்று அறுதியிட்டுக் கூறும் வகையில் கொண்டுசெல்ல இயலும் என்ற நம்பிக்கையும் ஆந்திராவில் நடைபெற்ற மறுதேர்தலின் காரணமாய்ஆதரவற்றுவிட்டன. வாக்குப்பெட்டிகள் நிரம்பினால் ஆந்திராவில் முதன் முதலாக கம்யூனிஸ்டு ஆட்சியை நிறுவ இயலுமென்ற நம்பிக்கை கொண்டிருந்தனர் சில கம்யூனிஸ்டுகள். ஆனால், தேர்தலில் ஏற்பட்ட முறிவு கட்சிக்குள் புகைந்துகொண்டிருந்த போட்டி மனப்பான்மையையும் உட்பூசலையும் வளர்த்து விட்டிருக்கிறது. “காலம் வரும்; காத்திருப்போம்” என்றிருந்து வந்த பலம்பொருந்திய கம்யூனிஸ்டு கோஷ்டிகள் தலைமையை எதிர்த்துமுரசுகொட்டி கோஷ்டிச் சண்டைக்குத் தம்மைத் தயாராக்கிக்கொண்டுள்ளன. கட்சியைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் கண்டத்தின் தாத்பரியத்தை சரிவர அறிய, 1951-ல் ரணதேவ் வழியைவிட்டு விலகியபின் நிகழ்ந்த சம்பவங்கள் தெரிந்துகொள்ளப்பட வேண்டியவை ஆகின்றன.

சீனாவிலே புரட்சி வெற்றிபெற்ற நாளிலிருந்து ஆசிய கம்யூனிஸ்டுகளுக்கு அந்நாடு கவர்ச்சி தரும் கிரணகேந்திர மாயமைந்தது. “சோபிதம் மிக்கது சோவியத் ஒன்றே” என்று கூறிக்கொண்டிருந்த நிலைமை மாறி “இதோ, நவசீனாவைப் பாரீர்” என்று குதூகலத்துடன் சப்திக்க வாய்ப்பேற்பட்டது. ஆசிய நிலைமைகளுக்கு சோவியத் முறையைக் காட்டிலும் சீனாவில் கையாண்ட முறையே உகந்தது என்று குரல் எழுப்பப் பட்டது. நாட்டிலும் நகரத்திலும் விடாது நடத்தப்பெற்ற வர்க்கப் போராட்டத்தைவிட அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்கும், பெரிய முதலாளிகளுக்கும் எதிராக எல்லா விவசாயிகளையும், மத்தியதரவர்க்கத்தாரையும் ஒன்றாகத் திரட்டும் முறையே சிறந்ததெனக் கருதப் பட்டது. தோழர் ரணதேவ் சோவியத் முறையை விரும்பியதால், சீனாவின் முறையைக் காதலித்த ஆந்திர கம்யூனிஸ்டு கட்சியினுடையவும், மஹாராஷ்டிர கம்யூனிஸ்டுகள் பலருடையவும் கடும் எதிர்ப்புக் காளானார்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் பத்திரிகை தனது 1950 ஜனவரி 27-ந் தேதி இதழில் சீனாவின் முறையையே காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளும், அடிமைப்பட்டுள்ள நாடுகளும் பின்பற்றுதல் சிலாக்கியமென்று கூறிவிட்டது. “சீன மக்கள் கையாண்ட மார்க்கத்தைத் தான் தேச சுதந்திரத்திற்காகவும், மக்கள் ஜனநாயகத்திற்காகவும் போராடும் காலனீ ஆட்சிக்குட்பட்ட நாட்டுமக்களும், அடிமைத்தளையில் சிக்கிய நாட்டு மக்களும் கையாள வேண்டும்,” என்று உலக தொழிற் சங்கங்கள் சம்மேளனத்தின் துணைத்தலைவர் சிபார்சு செய்ததை ஆதரித்துத்தான் அப்பத்திரிகை எழுதிற்று. இவ்விதமாக ‘விவசாயிகள் புரட்சி இயக்கங்களைத் தோற்றுவித்தும்; தெலிங்கானா மக்களையும் விவசாயிகளையும் போரார்வத்துடன் கிளர்ச்சிகளில் ஈடுபடுத்தித் தலைமைவகித்தும் முன்னோடிகளாக விளங்கிய’ ஆந்திரத் தோழர்களுக்கும், ரணதேவுக்குமிடையே ஏற்பட்ட தலைமைப் போட்டி தீர்மானிக்கப்பட்டது கம்யூனிஸ்ட் மூலஸ்தானத்தால்; ஆனால் இதனால் கட்சிக்காக வென்று உடனடியான படையணி வகுக்கும் வித்தை எனப்படும் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாகக் கொள்ளப்படுவதற்கில்லை. சீனாவின் முறைக்குத் தேவையான கேடயங்களாக விளங்கிய நாட்டுப்புறங்களில் ‘மக்கள் விடுதலை சேனை’களை உண்டாக்குதலும், கொரில்லாப் போர் புரிதலும் ஆகிய இரண்டையும் கடந்த காலத்தில் ரணதேவ் சந்தேகத்திற்கிடமில்லா வார்த்தைகளால் பரிகசித்துள்ளார். “செல்வச் சீமான்களான விவசாயிகளுடைய ஒத்துழைப்புடன் நேரு சர்க்காருக்கெதிராக கொரில்லாப் போர்-இது முடியக்கூடிய காரியமா?” என்று அவர் வினா வெழுப்பினார். கம்யூனிஸ்டு அகிலத்தின் பத்திரிகையால் இவ்வினாவிற்குப் பதில் தரமுடியவில்லை. எனவே, மீண்டும் தங்கள் முறையைப் பிரசாரம்செய்ய ஆந்திர கோஷ்டிக்குத் துணிவு பிறக்கவில்லை.

இந்தத் தருணத்திற்றான் கம்யூனிஸ்டு கட்சியின் புதிய பொதுச் செயலாளர் ராஜேஸ்வர ராவ், பசவ புன்னய்யா, எஸ். ஏ. டாங்கே, அஜாய் கோஷ் ஆகியோர் மாஸ்கோ சென்றனர். நால்வர் இந்தியா திரும்பியதும் 1951-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கொள்கை விளக்கம் வெளியிடப்பட்டது. அந்தப் புது அரசியல் கோட்பாட்டிற்குப் பெயர் “யுக்த வழி” “பல மாதங்கள் தொடர்ந்து நடைபெற்ற நீண்ட விவாதத்திற்குப்பின் கட்சி, தேசம் விடுதலை பெறவும், மக்கள் மகிழ்ச்சி பெறவும் சரியான பாதை யாது என்பதைப் பற்றி முடிவுக்கு வந்துவிட்டது. அந்தப் பாதை ரஷ்யப்பாதையா சீனப்பாதையா என்று குறிப்பிட்டுக்கூற எம்மால் முடியாது; கூறவும் மாட்டோம். வரலாறு கூறும் பற்பல போராட்டங்களால் - குறிப்பாக ரஷ்ய சீன போராட்டங்களால் - தெளிவாகியுள்ள படிப்பினைகளைப் பயன்படுத்தும் வகையில் அது அமைவதாயிருக்கவேண்டும்...” என்று அக்கோட்பாட்டில் விளக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள [illegible]தால் புதுவழி ஒரு மத்[illegible] என்பது புலனாகிறது. ர[illegible] ராஜேஸ்வர ராவ் ஆகிய [illegible]

குமுறுது கம்யூனிஸ்டுக் கூடார[illegible]

சிலப்பதிகாரச் செல்வம்

மேலைநாட்டு அறிஞர் ஊழி

திராவிட ஒப்பியல் மொழிநூல் இயற்றி மாளாப் புகழ் எய்திய மேலைநாட்டுத் திராவிடமொழி அறிஞரான டாக்டர் கால்டுவெல் சிலப்பதிகாரம், சங்க இலக்கியம் வெளிவருமுன் வாழ்ந்தவர். ஆனால் அவற்றின் முதல்பதிப்புக்கள்வெளிவந்தபின் தமிழ்ப்பணி, தமிழ் இலக்கியப் பணிகளில் முனைந்தவர் டாக்டர் ஜி. யூ. போப். அவர்கூடத் திருக்குறள், நாலடியார், திருக்கோவையார் ஆகிய நூல்களைத்தான் முழுதும் ஆய்ந்து போற்ற முடிந்தது. சிலப்பதிகாரம் அவர் கண்களைக் கவரவில்லை.

பழமை ஆராய்ச்சி அறிஞராகிய இவர்கள் சிலப்பதிகார காலத்தை அறியாது இருந்ததே அதில் அவர்கள் கவனம் செல்லாததற்கு ஒரு காரணமாய் இருந்திருக்கக்கூடும்; அது திருக்குறள், நாலடியார், திருக்கோவையார் ஆகியவற்றிற்குப் பிற்பட்ட, ஒருவேளை இடைக்காலத்திற்குக்கூட பிற்பட்ட ஒரு அணிமைக் கால நூல் என்று அவர்கள் எண்ணி இருக்கக்கூடும்.

ஒரு நூலின் பெருமையைக் காலம் அளந்துவிடாது. பழமை மட்டுமே அழகு தராது. சிலப்பதிகாரத்தின் அருமை பெருமைகள் அது பாரதிகாலத்ததாக, பாரதிதாசன் காலத்ததாக இருந்தால் கூடக் கெட்டுவிடமாட்டா. எனவே, பழமைப்பற்று அற்ற இலக்கிய

பன்மொழிப்புலவர்

கா. அப்பாதுரையார்

நுகர்வாளர்களாவது அதைப் போற்றிப் பாராட்ட முன்வந்திருக்க வேண்டும். ஆனால் இந்நிலை ஏற்படவில்லை. இரண்டாம் பதிப்பின் ஆண்டு (1920) இதைக் காட்டுகிறது. முதற்பதிப்புக் கழிந்து 28 ஆண்டுகள் வரை சிலப்பதிகாரத்துக்கு மறு பதிப்புத் தேவைப்படவில்லை.

அறிதுயில் காலம்

முதற்பதிப்பு வெளிவந்த பின்னும் சிலப்பதிகாரம் செல்வாக்கு அடையாததன் காரணம், அல்லது காரணங்கள் என்ன ?

முதல்வதாக, எடுத்த இடமெல்லாம் காமச்சுவையே மலிந்த நைடதம் போன்ற நூல்கள்-பக்திப் ...சுரங்கள்-இராமாயண பாரதங் ...-கம்பராமாயண - பெரிய புரா...ள் ஆகியவற்றுக்குள் புலவர் ... மக்களும் சிறைப்பட்டு ...டந்த காலம் அது !

...ாவது காரணம், அனைத் ...இயக்கமாக காங்கிரஸ் ...யக்கமும், அனைத்துலக ...ரமஞான இயக்கமும் ...ன்ற காலம் 20-ம் ...முதல் இருபது ஆண்டுகளே. தமிழ், இரண்டு இயக்கத் தலைவர்களுக்கும் இயக்கங்களுக்கும் புறம்பானது. தமிழ் இலக்கியமோ அவர்களுக்குஎட்டாக் கனி. எட்டினாலும் வேண்டா வெறுப்புக்குரியது. அவர்கள் கருத்தார்வங்களையும், கனவார்வங்களையும், அவா ஆர்வங்களையும் தூண்டிய நாடு மொழி, பண்புகள் வேறு. மக்களை தமிழகம், தமிழ், தமிழ்ப் பண்பு ஆகியவற்றின் திசையில் நாடாமல் வேறு திசைக்கு இழுத்தடித்துச் சென்றன அவ்வியக்கங்கள்!

மூன்றுவது காரணம் கல்வித் துறையின் சூழ்நிலை பற்றியது. ஆங்கிலக் கல்வியில் வங்கத்தைத் தாண்டி தமிழகம் குதித்தோட முயன்ற காலம் அது. சென்னைப் பல்கலைக்கழகம் அப்போட்டியில் முனைந்து முன்னேறிற்று. ஆங்கிலக் கல்வி பெருகிற்று, அதுவும் ஆட்சிப் பிடியில் இருந்த அக்கிரகார மக்களிடையேதான் பெரிதும் வளர்ந்தது. ஆங்கிலக்கல்வி முறையில் இன்றிருக்கும் அளவில் பத்தில் ஒரு பங்குகூட அன்று கல்லூரியிலோ, உயர்நிலைப்பள்ளிகளிலோ தமிழ் கிடையாது. இருந்த சிறிய அளவில்கூட அதைப் பயன்படுத்த இன்று தமிழகத்தில் எழுந்துள்ள புதிய பல்கலைக்கழகப் புலவர் கூட்டம் அன்று தோன்றவில்லை. பல்கலைக் கழகத்தில் புலவர் தேர்வுத்திட்டம் வராத காலம் அது. அத்திட்டம் வந்தபின்னும் தமிழரிடையே ஒரு பெருங் கிளர்ச்சியினாலேயே அது தனித்தமிழ்த் திட்டமாக (குரூப்70) அமைந்து தமிழ் வளர்த்தது.

இத்திட்டம் இன்றும் தமிழகத்தில் தமிழுக்கு மட்டும்தான் உண்டு-பிற திராவிட மொழிகளுக்கோ, ஏனைய தாயக மொழிகளுக்கோ இன்றும் இல்லை-அதுபற்றி மற்ற எந்த மொழி மக்களும் கனவுகூடக் காணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மூன்று இடையூறுகளால் சிலப்பதிகாரம் வெளிவந்தும் உயிர் பெறாது இருந்தது. பொதுமக்கள் பாசுரங்கள், வடமொழிப் புராணங்களின் கதைக் கச்சேரிகளில் ஈடுபட்டனர். அந்நாளைய பட்டம் இல்லாப் புலவர்களில் சிலர்-செல்வக்குடியில் பிறந்து சீரான வாழ்வுக்கு வழியுடைய சிலர்-கம்பராமாயணமோ பெரிய புராணமோ பாடி மகிழ்ந்திருந்தனர்.

தமிழகம் அன்று தூங்கவில்லை-தூக்கத்தில் கனவுகள் எழக்கூடும். அவர்கள் அறிதுயிலில் அயர்ந்தனர்-அயல் பண்பாட்டில் மகிழ்ந்து தமிழ்ப்பண்பை மறந்திருந்தனர். இந்நிலையில்கூட அறிஞர் சுந்தரனார், டாக்டர் நடேசனார் ஆகியவர்கள் காலங்கடந்து தமிழ் பற்றிய கனவுக் காட்சிகள் கண்டனர். கவிஞர் பாரதியார் கனவில் இளங்கோவே தோன்றியதுண்டு. ஆனால் அவர்கள் கண்டதை அவர்கள் காலத் தமிழர் காணவில்லை. தமிழ் அறிவுத் துறைத்தலைவர் மறைமலையடிகளும் தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை, கலைத்துறைத் தலைவர், சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும், தமிழ் வாழ்வில் இடம்பெறும்வரை, புதிய தமிழக இயக்கங்கள் எழும்வரை, அத்தலைவர்களுக்காகவும் அவ்வியக்கங்களுக்காகவும் காத்துக் கொண்டு, தமிழினத்தின் கருவிலே சிலப்பதிகாரமும் மறுமலர்ச்சியும் தூங்கிக்கொண்டிருந்தன.

(தொடரும்)

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

இன்னவர்தான் நியாயமான வழி காட்டியவரென்று ஆதரிக்கப்படவில்லை. இந்தக் கோட்பாட்டை செயல் முறைக்குக் கொண்டுவர வெவ்வேறு கொள்கை கொண்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்குமுகத்தான், ஒரு மத்திய குழு அமைக்கப்பட்டது. அஜாய் கோஷ், இ. எம். எஸ். நம்பூத்ரிபாத், பசவ புன்னய்யா, ஏ. கே. கோபாலன், டாங்கே, ராமமூர்த்தி ஆகியவர்கள் முழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். வேறு வேறு கருத்துக்கொண்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகை பின்னால் மதுரையிலும் பின்பற்றப்பட்டது. மதுரையில் நடந்த மாநாட்டில் மத்திய கட்சியின் தலைமையைப் பறிக்க ஆந்திர கோஷ்டி எடுத்துக்கொண்ட மறு முயற்சியைத் தவிர, நிலைமையில் மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டதாக தலைமைமீது குற்றம் சுமத்தி கட்சியின் அதிகார பூர்வமான அரசியல் வழிக்கு எதிரிடையாக ஆந்திர கோஷ்டி ஒரு போட்டிக் கோட்பாட்டை சமர்ப்பித்தது. தொடக்கத்தில், அமெரிக்கா சர்வ தேசிய விரோதியென்றும், பிரிட்டன் தேசிய விரோதியென்றும் ஆகவே, அவ்விரு நாடுகளையும் தனித்தனியே கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும், இரண்டையும் ஒன்றாகப் பிணைத்து எதிர்த்துத் தாக்கக் கூடாது என்றும் விளக்கம் தரப்பட்டது; சீனாவின் முறை முன் மாதிரியாகக் கொள்ளப்பட வேண்டுமென்று கூறப்பட்டது.

"நம் கட்சியும் வர்க்கமும் இந்தியாவில் அமெரிக்க ஆதிக்கம் சிறுகச்சிறுக நுழைந்துகொண்டிருக்கும் நிலையை அவ்வளவாக எதிர்க்கவில்லை என்றும், பிரிட்டிஷாரின் பங்குகளை விழுங்கும் வகையில் தோன்றியுள்ள அமெரிக்கர்களுடைய திட்டங்களின்மீது நமது எண்ணத்தைச் செலுத்தித் துவேஷிக்கவில்லை என்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணினால் எண்ணிக்கொள்ளட்டும்; நமக்கு அதைப் பற்றிய கவலை தேவையில்லை. அவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணிடும் பட்சத்தில் நமது புரட்சி எவ்வகையிலும் நசிந்துவிடப் போவதில்லை. அது தற்சமயம் ஆங்கிலோ-அமெரிக்கப் பூசல் என்ற அளவோடே நிற்கும். எந்தப் பக்கம் சேர்வதென்பது நம் வேலையாகாது. இரண்டில் எதையேனும் ஆதரிப்பதா என்ற பிரச்சினையும் நம்மால் கவனிக்கப்பட வேண்டியதல்ல..." என்பதாக ஆந்திர கோஷ்டி வாய்ப்பந்தல் வீசிற்று.

உள்நாட்டுக் கொள்கை வேறு என்பதாகவும், வெளிநாட்டுக் கொள்கை வேறு என்பதாகவும் இருக்கவேண்டுமென்று ஆந்திர கோஷ்டி விவாதித்தது: கட்சியின் அதிகார பூர்வமான திட்டத்திற்கு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுத் தலைவர் ஹாரி பாலிட் ஆதரவு தந்த போதிலும் மதுரையில் கூடிய பிரதிநிதிகள் அரசியல் தீர்மானத்திற்கு சுமார் 455 திருத்தங்களைக்கொண்டு வந்தனர். இறுதியாக ஆந்திராவையும் வங்காளத்தையும் சேர்ந்த 87 பிரதிநிதிகள் வாக்களிப்பில் கலந்துகொள்ள மறுத்த நிலையில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அங்குக் கூடியிருந்த பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 294. அதைத் தொடர்ந்து, பி. சி. ஜோஷியின் முன்னாள் சீடர்களான கோஷ், நம்பூத்ரிபாத் போன்றோர் கட்சியின் தலைமையேற்றனர்.

ஈண்டு கவனத்தில் கொள்ளத் தக்க விஷயம் ஒன்றுளது. ஆந்திர கோஷ்டியும், அஜாய் கோஷும் மற்றவர்களும் எதிரும் புதிருமாயிருந்து நடத்திய சண்டையில் ரணதேவும் அவர்தம் ஆதரவாளர்களும் எந்தப் பக்கமும் சாயவில்லை. ஆகவே, அவர்களுக்குக் கட்சியின் மத்திய கமிட்டியில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை.

ஆந்திரத் தேர்தலில் மண் கவ்விய படலத்தின்பின் விளைந்த சம்பவங்களை, இதுவரை விளக்கப்பட்டு வந்த பழைய வரலாற்றைப் பின்னணியாகக்கொண்டு கவனிக்க வேண்டும். அண்மையில் நடைபெற்ற மத்திய கமிட்டியின் கூட்டத்திலும், அதற்கு முன்னர் கட்சியின் ஆந்திரத் தலைவர்களிடையே நடந்த பேச்சு வார்த்தைகளிலும் தேர்தலில் தோல்வியேற்படுவதற்கு ஏதுவாயிருந்த சூழ்நிலையாது என்ற பிரச்சினைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆந்திர யூனிட்டுடைய நடவடிக்கைதான் காரணமென்று அகில இந்தியத் தலைமையும், மூலக்கொள்கைத் திட்டத்தில் ஏற்பட்ட சீர்திருத்த நோக்கம் தான் காரணமென்று ஆந்திர கம்யூனிஸ்டுகளும் ஒருவர் முகத்தில் மற்றவர் கரி பூசிக்கொண்டிருக்கின்றனர். "எங்களுடைய கோட்பாட்டை மதுரையில் ஒப்புக்கொண்டிருந்திருந்தால், கட்சி போரார்வத்துடன் இருந்திருக்கும்; மக்களும் இந்திய சர்க்காரின் சமீபத்திய வெளிநாட்டுக் கொள்கையால் கலக்கமடைந்திருக்கமாட்டார்கள்" என்பதாக அவர்கள் வாதம் செய்தனரென சொல்லப்படுகிறது. எனவே, 1952 தேர்தலின்போது கம்யூனிஸ்டுகள் பெற்ற பிரமிக்கத்தக்க வெற்றிக்குக் காரணம் 1948 முதல் 1950 முடிய அவர்கள் கையாண்ட போரார்வமான திட்டமென்றும், பின்னால் சீர்திருத்த வழியைப் பின்பற்றியதே இந்த ஆண்டு அவர்கள் அனுபவித்த தோல்விக்குக் காரணமென்றும் ஆந்திர தலைவர்கள் வாதிடுகின்றனர்.

இவ்வாறாக, மதுரையிலே அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்த இரு கோஷ்டியினரும் தற்போது

(8-ம் பக்கம் பார்க்க)

எண்ணம்

கண்ணதாசன்

கன்னடர்கள் கருதுகிருர்களா, கேரளத்தார் கேட்கிருர்களா, ஆந்திரத்தார் ஆதரிக்கின்றனரா என்று ஓசை நயத்திற்காக கேள்வி தயாரிக்கும் சிலர் ஓயாமல் கேட்டுக் கொண்டிருப்பது நண்பர்களுக்குத் தெரியும். கன்னடத்தார் கருதுவது மட்டுமல்ல, கேரளத்தார் கேட்பது மட்டுமல்ல 'திராவிடம்' என்ற சொல் கேட்ட உடனேயே ஓங்கிக் கைதட்டி தங்கள் உணர்ச்சியைக் காட்டிக்கொள்வதையும் காண முடிந்தது என்ருல். சாதாரணமாக தமிழ்நாட்டு அரசியல் மேடைகளிலே பேசும்போது,பொதுமக்கள் கைதட்டிருல் பேசுகிற பேச்சாளனுக்கு ஒரு உற்சாக உணர்ச்சி ஏற்படுவது வழக்கம். அதே தமிழ் பேச்சாளன் பிறமொழிப் பகுதிகளிலே பேசி,கைதட்டும் வாங்கிருல் தான் சார்ந்திருக்கும் கொள்கை வெற்றி பெறுவது கண்டு பூரித்துப் போவதும் வழக்கம். ஒரே உணர்ச்சிக்கு மனம் ஒப்புக்கொடுக்காமலிருந்தால் கேட்கிறவன் கைதட்ட முடியாது. ஆகவே, கைதட்டலே முன் வைத்து நான் சொல்வதற்குக் காரணம், நாம் சொல்லுகிற குறிக்கோளே அதே சுதியில் கேட்டு, அதே அளவில் ஆதரிப்பதைக் கண்டதிருல்தான்.

சில நாட்களுக்குமுன், சென்னே செயிண்ட்மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்ற அகிலமலேயாளிகள் பதிஞருவது மாநாட்டின் இலக்கியப் பிரிவுக்கூட்டத்தில் கலந்துகொள்ள நான் அழைக்கப்பட்டிருந்தேன். கேரளத்துப் பத்திரிகாசிரியர் எழுத்தாளர் அத்தனேபேரும் அந்த மாநாட்டில் பங்குபெற்றிருந்தனர். சுமார் 1500 பிரதிநிதிகள் கேரளத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்தார்கள். நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் இலக்கியப் பிரிவுக்குத் தலேமை வகித்தார். ஒரே ஒரு தமிழனுக நின்று அங்கு நான் பேசினேன்: மலேயாளிகளுக்கும், தமிழர்களுக்குமுள்ள இனஉணர்வு 'திராவிடர்' என்ற சொல்லாலே குறிப்பிட்டுப் பேசியபோதெல்லாம், மலேயாளத் தோழர்கள் பெருமிதத்தோடு ஆரவாரித்தனர். ஒரு கலாச்சார அடிப்படையிலே இனம் வளர்ந்ததும்,வேற்றுக் கலாச்சாரம் புகுந்ததின் விளேவால், வேருெரு மொழியும் இலகுவில் புகுந்து ஒரு இனத்திற்குள் சிறு பிளவை ஏற்படுத்தியதையும், மூடகமாகச் சொன்னதைக்கூட அவர்கள் புரிந்து கொண்டு ஆரவாரித்தார்கள். தனிப்பட, இரண்டொரு பத்திரிகையாசிரியர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் அதை முழுக்க, முழுக்க ஆதரித்தார்கள். அத்தனேயையும் கூட்டிக் கணக்குப் பார்க்கும்போது மலேயாளிகளுக்கு உள்ளும் ஒரு இன எண்ணம் இருப்பதும், அதை வெளியே சொல்லமுடியாமல் திண்டாடுவதும் நன்ருகத் தெரியலாயின.

சமீபத்தில் பெங்களூரில் நடந்த திருக்குறள் மாநாடு, கன்னடப் பகுதியில் நமது கொள்கைக்கிருக்கும் வரவேற்பைக் காட்டியது. சகல கட்சிக்காரர்களும் அதில் கலந்து கொண்ட போதிலும் 'திராவிடம்' என்ற சொல் உபயோகிக்கப்பட்ட போதெல்லாம் அங்கே வான்முட்ட எழுந்த கையோசை அத்தனே பேரிலும் நாமே தலேதூக்கி நிற்கிருேம் என்பதை எடுத்துக்காட்டியது. அதனுல் சில, கட்சிச்சார்பற்ற பேச்சாளர்களின் ராகம்கூட நமது "சுதியோடு ஒட்டிக்கொண்டது. சொல்லாராய்ச்சி செய்கிறவர்கள், இந்த வார்த்தை தமிழல்ல என்று மட்டுமே வாதிக்கமுடியும்; அவர்களே கொள்கை யாராய்ச்சி செய்யப்போருல், நமது கொள்கையே சரியல்ல என்று வாதாட தலேகீழாக நின்ருலும் முடியாது" என்று பல மேடைகளில் கூறி வந்திருக்கிருேம். அதோடு,"மற்ற மொழிப் பகுதிகள் நம்மை மதிக்கவில்லே என்று சொன்னவர்கள் அந்த வார்த்தையையும் இனி நம் மீது வீசமுடியாது." என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும், இப்போது, கன்னட, கேரள மாவட்டங்களில் காணப்படும் வளர்ச்சி நாம் எடுத்துக்கொண்ட பிரயாசையால் ஏற்பட்ட வளர்ச்சியல்ல; தானுக வளர்ந்த பிள்ளே அது. இன்னும் நாம் முயற்சி எடுத்துக்கொள்வோமானுல் பஞ்சிலே நெருப்புப் பற்றியதுபோல கொள்கை பரவுவதைக் காணலாம். மொழி வழி மாநில கோஷத்தை எல்லோரும் ஆதரிப்பதை சாதகமாக்கிக் கொண்டு திராவிட நாடு பிரச்சிஜனக்கு அது மாற்று மருந்தென்று தவருக கணித்து, ஆந்திர, மலேயாள, கன்னடமக்களோடு பகையை வளர்த்துவிடுபவர்கள், பச்சையாக, துரோகிகள், அயோக்கியர்கள், என்று முத்திரை போடப்பட வேண்டியவர்களாவார்கள். அவர்களது பேச்சை கேட்டு அந்தப் பகுதிகளிலே இருக்கும் தமிழ்த் தோழர்கள், அந்தந்த மொழி மக்களேப் பகைத்துக்கொள்ளாமல் நல்லுறவை வளர்க்கப்பாடுபடுவார்களேயானுல் 'திராவிட நாடு' பிரச்சினே சுலபமாவதோடு எதிர்கால உறவும் சுலபமாக இருக்கும். திராவிட இயக்கத் தோழர்களுக்கு அதைச் சொல்லவேண்டியதில்லே. மற்ற சில்லறைக் கழகங்களில் இருப்பவர்களும், கட்சி சார்பற்றவர்களும் இதை கவனிக்கவேண்டியது முக்கியம்.

ஆசிரியர் கண்ணதாசன் இலங்கை பயணம்

நமது ஆசிரியர் கண்ணதாசன் கலந்துகொள்வதாக இருந்த இலங்கை-மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழா, மே, 23, 24 ந் தேதிகளிலிருந்து ஜூன் 11, 12 ந் தேதிகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, ஜூன் முதல் வாரத்தில் ஒப்புதல் தந்த கோவை மாவட்ட சுற்றுப்பயணம் தற்காலிகமாக ரத்து செய்யப் பட்டிருக்கிறது. ஆசிரியர் கண்ணதாசன் ஜூன் 5 வாக்கில் இலங்கை புறப்படுகிருர்.

தி. மு. க. மாநில மாநாடு நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

இடம் : சென்னே கோகலே மண்டபம்

காலம் : 24-5-55

செவ்வாய் மாலே 6 மணிக்கு

அறிஞர் அண்ணு

சொற்பொழி வாற்றுவார்

கட்டணம் ரூ 1, அணு 8.

சென்னே மாவட்ட தி. மு. க.

இளம்பரிதி
செயலாளன், சென்னே மாவட்டம்.

மாநில மாநாடு

★ திருச்சியில் கூடும் மாநில மாநாடு

★ தாயகத்தை மீட்கும் தீரர்கள் படைவீடு !

★ புதிய போதுச் செயலாளர் மகிழவேண்டும்

★ பொருளாளர் அண்ணு பூரிக்கவேண்டும்.

★ வடபுலம் வென்ருேரே !

★ வளமார் திராவிடத்தின் கண்மணிகாள் !

★ வருகின்ற மாநாட்டின் வெற்றி—நீங்கள்.

★ தருகின்ற ஆதரவின் அளவினதே !

★ தங்க நாணயங்கள் தா இயலாவிடினும்

★ தங்களால் இயன்றதைத் தாருங்கள் !

★ இல்லந்தோறும் சென்று உள்ளம்.

★ தோறும் விளக்குங்கள் !

★ சிறுகச் சிறுக அனுப்பி நிதியைப்

★ பெருக்கிப் பெருக்கிக் காட்டுங்கள்.

ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி

"'இப்போதும் காலம் மாறிவிடவில்லை. சந்தர்ப்பம் தவறிவிடவில்லை. இன்று நீ அனுமதியளித்தாலும் கணக்காயரைத் திருமணம் செய்து கொள்கிறேன்' என்றேன் என் அன்னையிடம். எப்படியாவது நான் வேவுப்படையில் சேர்ந்துவிடக்கூடாது. அதுதான் அவளுடைய முடிவு. அதற்காக எதையும் செய்யத் தயாராக இருந்தாள்.

"அன்று நல்ல பௌர்ணமி நிலவு. வானத்தில் மேகங்களே இல்லை பால்போன்ற நிலவொளி வையகமெங்கும் பரவியிருந்தது. எங்கள் வீட்டின் நிலாமுற்றத்திற்கு வந்தேன். யாழெடுத்து இசைமீட்டினேன். மோகனம், மகுடி போன்ற இசைகளைப் பரப்பினேன். நீண்ட நாட்களாக என்னைப் பார்க்காமலும் எனது இசையைக் கேளாமலும் தவித்துக்கொண்டிருந்தார் என் காதலர். திடீரென இசை வெள்ளம் பொழிவது கேட்டு எழுந்து வந்தார். அவருடைய வீட்டின் நிலா முற்றத்திலே அவர் வந்து நின்றுகொண்டிருந்தார். தன்னையுமறியாமல் அவர் இசையில் மனம் பறிகொடுத்து நின்றிருந்தார்.

"இரண்டாவது யாமம் முடிந்து மூன்றாவது யாமம் ஆரம்பமாகும் மணியோசை அரண்மனைக் கோட்டை வாயிலிலிருந்து முழங்கியது. நீண்டநேரமாகிவிட்டதை அறிந்த நான் யாழைக் கீழே வைத்துவிட்டு எழுந்தேன். உடனே பக்கத்து வீட்டில் ஒரு உருவம் நகர்வதைக் கண்டேன். உற்றுக் கவனித்தேன். "கயல்விழி!" என்ற குரல் என்னைப் பரவசப்படுத்தியது.

"வாருங்கள்" என்றேன்.

"ஏன்? அடிவாங்கிக் கொள்ளவா?"

"இல்லை! அன்புரைகள் பேச!"

"உன் தாய் அனுமதிப்பாளா?"

"அனுமதி வாங்கி விட்டேன். நமது திருமணம் நடைபெறவேண்டியதுதான் பாக்கி!"

"கயல்விழி!"

"அத்தான்!"

"வழக்கம்போல் ஒரே தாவில் எங்கள் வீட்டின் முற்றத்திற்கு வந்துவிட்டார் என் காதலர். அவரிடம் நடந்ததைத் தெரிவித்தேன். அவர் ஆனந்தமிகுதியால் என்னை-- வேண்டாம். அது எங்களுடனேயே இருக்கட்டும்.

"மறுநாள் என் காதலர் என் தாயிடம் அனுமதி பெற்றார். எங்கள் திருமணமும் முடிந்தது. இந்நிலையில் வேவுப்படைக்குப் பெண்களைச் சேர்க்கும் வேலை மும்முரமாக நடைபெற்றது. ஒருநாள் அரண்மனையிலிருந்து வந்த என் கணவர் "கயல்விழி! நீயும் வேவுப்படையில் சேர்ந்துதான் ஆகவேண்டுமாம். இது மன்னரின் கட்டாய உத்தரவு" என்றார். "நாமிருவரும் தம்பதிகளான பிறகு அந்தச் சட்டம் என்னை எப்படிப் பாதிக்கும்" என்று கேட்டேன்.

"நமது திருமணத்திற்கு முன்பே சட்டம் வந்துவிட்டது. சட்டத்திற்குப் பயந்து நம்மைப்போல் பலர் திருமணம் செய்துகொண்டுவிட்டார்கள். இதை அறிந்து தான் அரசர் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார்" என்றார். 'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன். அவர் சொன்னார்; "கண்ணே! நமது விருப்பமோ நிறைவேறிவிட்டது. இன்று நீ குலமகளாகிவிட்டாய். நான் அரசாங்கத்தில் வேலை பார்க்கிறேன். தேசத்திற்கும் மன்னருக்கும் நான் நன்றியுடன் நடக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மன்னரின் உத்தரவை நாம் புறக்கணித்தால் தேசத் துரோகிகளாக நம்மைக் கருதிவிடுவார்கள். ஆகையால் உயிருக்கோ, கற்புக்கோ பங்கமில்லாத முறையில் நீ வேவுப்படையில் சேர்ந்து வேலை செய்வதே நல்லது" என்றார். நானும் அவருடைய வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் ஒப்புக்கொண்டேன்.

வேவுப்படையில் சேர்ந்த பிறகு நான்கு மாதங்கள் தலைநகரில் பயிற்சிபெற்றேன். என் தாய் இதை வெறுத்தாலும், வெளியில் சொல்லப் பயந்து மௌனமாகி விட்டாள். அப்போது நான் நான்கு மாதக் கர்ப்பிணியாக இருந்தேன். என் நிலையை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியும், என்னைச் சளுக்கநாட்டிற்குச் செல்லும் வேவுப் படையுடன் அனுப்பிவிட்டார்கள். என் தாய் இச்செய்தி கேட்டு மனமிடிந்து போனாள். என் ஏக்கமாகவே நான் திரும்பி வருவதற்குள் இறந்து போனாள். என் கணவர் முதலில் ஒப்புதல் தந்திருந்தாலும், கர்ப்பிணியாக இருக்கும் நான் வேற்று நாட்டிற்கு--அதிலும் நீண்ட தூரமுள்ள சளுக்கநாட்டிற்கு அனுப்பப் படுவதைக் கண்டு மனம் துடித்தார். அவருடைய மனதிலே பிரிவாற்றாமையும் ஏக்கமும் குடிகொண்டன. அவர் வெறும் நடைப்பிணமாக நாட்களைக் கழித்து வந்தார்.

"சளுக்க நாட்டிற்குச் செல்லும் வழியில் தான் இடைதுறை நாடு இருக்கிறது. நாங்கள் இடைதுறை நாட்டில் நமது வேவுப் படையினரைச் சந்தித்தோம். நீண்டதூரப் பிரயாணத்தால் எனக்கு அலுப்பும் வேதனையும் ஏற்பட்டது. அதனால் நான் இடைதுறை நாட்டிலேயே நிறுத்தப்பட்டேன். அங்கே எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றும் விநோதமாக இருந்தன.

"அங்கே நமது வேவுப்படையில் ஒற்றராக இருந்த ஒரு வீரனின் மனைவி என்று என்னை யார் கேட்டாலும் சொல்லச் சொன்னார்கள். நாங்கள் இருவரும் ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தோம். வெளியாரின் கண்களுக்கு நாங்கள் தம்பதிகளாகத் தோன்றினோம்.

"ஆரம்பத்தில் எங்களிடம் அறிவிக்கப்படும் செய்திகளை நான் போய் மற்றொரு வீரரிடம் காத்து நின்று தெரிவித்து வந்தேன். பிறகு திடீரென்று ஒரு நாள் இடைதுறை நாட்டின் சேனாதிபதி வீட்டில் வேலைக்காரியாக அமர்த்தப் பட்டேன். மிகவும் சாமர்த்தியத்துடன் அங்கே பேசப்படும் அரசியல் விவகாரங்களை அறிந்து அவ்வப்போது அனுப்பிவந்தேன். அதனால் நமது நாட்டிற்குச் சில அனுகூலங்கள் ஏற்பட்டன.

"நமது ஒற்றர் படைத்தலைவரான **மழபாடியார்** எனது திறமையைக் கண்டு வியந்து பாராட்டினார். இதுதான் சமயமென்று நினைத்து, அப்போதிருந்த எனது நிலையை அவரிடம் விளக்கினேன். எனது சேவையை இழக்க அவருக்கு மனமில்லை. ஆயினும் எனது நிலைக்கு இரங்கினார். பிரசவமாகி மூன்று மாதங்களில் மீண்டும் படையில் வந்து சேரவேண்டுமென உத்தரவிட்டார்.

"நான் தஞ்சை வந்தபோது என் கணவர் என்னை வாழ்த்தி வரவேற்றார். நான் செய்த அரும் பெரும் செயல்களைக் கண்டு தஞ்சை நகரமே புகழ்பாடுவதாகவும், அதனால் என்னைப் பிரிந்திருந்த ஏக்கம், கூட மறைந்துவிட்டதென்றும் தெரிவித்தார். மீண்டும் என் கணவருடன் கூடி வாழ ஆரம்பித்தேன். அப்போதுதான் நந்தினி எனக்குப் பிறந்தாள். மீண்டும் கவலை என்னை வாட்டியது. அன்புக் கணவருடன் அருமைச் செல்வியையும் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. நந்தினியை வளர்க்க அரசாங்கமே உதவி செய்தது. துன்பமும் துயரமும் அப்போதுதான் என் வாழ்வில் தலைதூக்கின.

"மீண்டும் நான் இடைதுறை நாட்டுக்கு அனுப்பப்பட்டேன். அப்போது இடைதுறை மன்னன் மேலைச் சளுக்கியருடன் சேர்ந்து கீழைச் சளுக்கிய மன்னரான விமலாதித்தருக்கு தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தான். இச்செய்தியை நான் தான் முதலில் தஞ்சைப் பேரரசுக்கு அனுப்பி வைத்தேன். நமது மன்னர் இராசராசர் இதையறிந்து கீழைச் சளுக்கியருடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன் பிறகு தான் உங்கள் சகோதரி குந்தவையும் விமலாதித்தரை மணந்துகொண்டார்.

"குந்தவை தேவி விமலாதித்தரை மணந்துகொண்டது காதல் வயப்பட்டதால் என்று பலரும் கூறலாம். ஆனால், அதற்கு உங்கள் தந்தை இராசராசர் இணங்கியது அரசியல் காரணத்தினால் தான். இதன் பிறகு வேவுப்படை-வீராங்கனைகளில் எனது பெயரே முதலிடம் வகித்தது. நான் வேவுப் படையில் வேலை பார்ப்பது எதிரி நாடுகளில் முக்கிய அதிகாரிகளுக்கும் தெரிந்து விட்டது. நான் எந்த நாட்டில் வேவு பார்க்கிறேனென்று எதிரிகள் ஆராய ஆரம்பித்தனர். நான் தஞ்சையில் இருந்தால் தூக்கிச் செல்லவும், வெளிநாடுகளில் காணப்பட்டால் கொன்றுவிடவும் திட்டம் தீட்டினர்.

"தஞ்சைக்கு அடிக்கடி வந்து நந்தினியையும் என் கணவரையும் பார்த்துச் செல்வேன். அரசரின் புகழுரை என்னை நாட்டின் சேவையில் அதிகமாக ஈடுபடச் செய்தது. என்னைப் பிரிந்து நந்தினி கூட இருந்துவிட்டாள். ஆனால் என் கணவர் எப்போதும் என் நினைவாகவே இருந்து வந்தார். அடிக்கடி கவலையினால் நோய்வாய்ப் பட்டார். வெளிநாடுகளில் சேவை செய்யும் எனக்கு என் கணவரைப்பற்றிய செய்திகள் சரியாகவே தெரிவிக்கப்படவில்லை.

"ஒரு நாள் வேவு வேலை காரணமாக இடைதுறைத் தளபதியின்

ஜூன் 18!

★ வளமிகுந்த நாடு வாழ்விழந்தது எப்படி?

★ சீரும் சிறப்பும் சிதறியோடியது எவ்வாறு?

★ திராவிடத்தின் பொருள் வளம் இனி எப்படி அமையப்போகிறது?

சொல்லின் செல்வர்

ஈ. வி. கே. சம்பத்

தரும்

பொருளாதாரத் தொடர் கட்டுரை!

'வாழ்வது எப்படியோ?'

ஜூன் 18

…ழில் தொடங்குகிறது.

வீட்டை விட்டு வெளியில் சென்று வந்தேன். அன்று தளபதி வெளியில் சென்றிருந்தான். மாளிகைக்கு திரும்ப இரவு நீண்ட நேரம் பிடிக்குமென்று சொல்லியிருந்தான். ஆனால் நான் திரும்பிவரும் போது தளபதியுடன் இடைதுறை மன்னனும் அங்கே யிருந்தான். அவன் என்னைப் பார்த்ததும் "யார் இவள்?" என்று கேட்டான். "வேலைக்காரி!" என்றான் தளபதி. "இருக்க முடியாது; நான் நம்பவும் முடியாது. இவ்வளவு நல்ல அழகி வேலைக்காரியாக இருக்கமுடியாது" என்று அழுத்தமாகக் கூறினன் இடைதுறை மன்னன்.

"அவள் வேலைக்காரியே தான். கடந்த ஓராண்டாக இங்கே தான் வேலை பார்த்து வருகிறாள். இவளுக்கு ஒரு குழந்தை கூட இருக்கிறது" என்றான் தளபதி. "இவ்வளவு அழகான வேலைக்காரி ஒருத்திகூட நமது அரண்மனையின் அந்தப்புரத்தில் இல்லை. இவளை நமது அரண்மனைக்கு அனுப்பிவிடு" என்றான் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே.

"இடைதுறையான் கபடமாகச் சொன்னதை நான் அப்போது புரிந்துகொள்ளவில்லை. 'இது நல்ல சந்தர்ப்பம். அரண்மனைக்குச் சென்றால் சரியான புலன்கள் கிடைக்கும். எனது வேவு வேலையும் வெற்றியடையும்' என்று நினைத்தேன். அதனால் தான் அவன் என்னைப் பார்த்துச் சிரித்ததும், நானும் சிறிது புன்னகை செய்தேன். அவன் என் புன்னகையில் மயங்கிவிட்டான். தளபதி மறுத்துப் பேச வழியின்றி மறுநாளே என்னை அரண்மனைக்கு அனுப்பிவிட்டான்.

"அன்று இரவு இடைதுறையான் அந்தப்புரத்திற்கு வந்தான்: ராணி அவனை வரவேற்றாள். "எங்கே இன்று வந்த புது வேலைக்காரி?" என்று அதிகார தோரணையில் கேட்டான். ராணி என்னை அழைத்தாள். ராணி இருக்கும்போது பயமில்லை என்ற எண்ணத்தில் அங்கு சென்றேன். என்னைப் பார்த்து மீண்டும் சிரித்தான். நான் தலை குனிந்து நின்றேன். "கொஞ்சம் பழரசம் ஊற்றி வா" என்றான். நான் திரும்பி நடந்தேன்.

"பழரசத்தை எடுத்துக்கொண்டு அங்கே வந்தேன். ராணியைக் காணவில்லை. இடைதுறையான் சிரித்துக்கொண்டே எழுந்து வந்து கதவைத் தாளிட்டான். அப்போது தான் என் மனம் 'திக்' என்றது. "உன் பெயர் என்ன?" என்று கேட்டான். "மீனக்கண்!" என்றேன். "சரியான பெயர். நீ தான் அதிர்ஷ்டக்காரி. இந்த அரண்மனையில் எத்தனையோ பணிப்பெண்கள் இருக்கின்றனர். எல்லோருக்கும் என் தரிசனம்கூடக் கிடைப்பதில்லை. ஆனால் இன்று வந்த உனக்கு என் மஞ்சத்திலே இடம் கிடைத்தது உனது பாக்கியம் தான்" என்றான். என் மனம் வேகமாக அடித்துக் கொண்டது. தப்ப வழியிருக்கிறதா வென்று சுற்றுமுற்றும் பார்த்தேன். வாயிற்கதவும் தாளிடப் பட்டுவிட்டதால் தப்ப வேறு வழியில்லை. திகைத்தேன். என் உடல் நடுங்கியது.

"உன் கையால் பழரசத்தைக் கொடு. நான் சாப்பிடுகிறேன்" என்றான். நான் பயந்தபடியே கோப்பையை நீட்டினேன். அவன் அதில் பாதி அருந்தினன். பாதியை என்னிடம் கொடுத்து "நீயும் அருந்து" என்றான். நான் வேண்டாமென்று தலையை ஆட்டினேன். அவன் என் கைகளைப் பிடித்து அருகில் இழுத்தான். நான் திமிறினேன். ஆனால் அவனுடைய இரும்புக் கரங்கள் என்னை இறுகப் பிடித்தன. இழுத்தான். நான் அவனுடைய பஞ்சணைமீது ஓடி விழுந்தேன்.

"மீனக்கண்ணே! நீ தப்ப முடியாது. வீணாகச் சஞ்சலப்படாதே! என்னுடைய பசிக்கு விருந்தளிக்கவே உன்னை அழைத்தேன். முதலில் பழரசத்தால் உடற்பசியைத் தீர்த்துவிட்டாய். இப்போது உணர்ச்சிப்பசி" என்றான். பலமுறை பஞ்சணையை விட்டு எழுந்தோட முயன்றேன். பாவி விடவில்லை. என் கற்பைச் சூறையாடிய பிறகே அயர்ந்து தூங்கினான். எனக்கு ஆத்திரமும் அழுகையும் வந்தது. புலிக்குகையில் அகப்பட்ட ஆடுபோலானேன். என் உள்ளம் முறிந்தது. இனி எப்படி என் கணவர் முகத்தில் விழிப்பது என்று நினைத்து அழுதேன். என் வாழ்வு அத்துடன் முடிந்தது என்றும் முடிவு செய்தேன். தற்கொலை செய்துகொள்ள விரும்பினேன். இடைதுறையானின் கட்டாரி பக்கத்திலே கிடந்தது. அதை எடுத்தேன். கத்தியை உருவினேன். ஆனால் திடீரென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று.

"நான் தற்கொலை செய்து கொள்ளு முன்பு, என்னைக் கெடுத்து, என் வாழ்வைப் பாழாக்கிய இடைதுறையானைக் கொன்று விடுவதென்று முடிவு செய்தேன். கத்தியை ஓங்கிக்கொண்டு அவனருகில் சென்றேன். அவனைக் குத்திக் கொன்றுவிடலாம். அது சுலபமான வேலைதான். ஆனால் நான் ஏன் வேவுக்காரியானேன்? என் வாழ்வு என் சூறையாடப்பட்டது? நாட்டின நலனுக்காக நான் ஏற்றுக்கொண்ட பணியை முடிக்காமல் எந்த முடிவுக்கும் வரக்கூடாது என்று தீர்மானித்தேன். நானோ கெடுக்கப் பட்டுவிட்டேன். இனி அதற்காக வருந்திப் பயனில்லை. இடைதுறையானின் ஆசை நாயகியாக இருந்து, அரசாங்க ரகசியங்களை தஞ்சைக்கு அனுப்ப முடிவு செய்தேன்.

"அதன்பிறகுதான் என் உள்ளம் உறுதி பூண்டது. எனக்கென்று சொந்தமாகக் கணவரோ, குழந்தையோ, உற்றாரோ, உறவினரோ இல்லை யென்றும் எல்லோரும் எனக்குச் சொந்தமென்றும், தாய்நாட்டின் நலனுக்காக என் வாழ்வை அர்ப்பணிப்பதென்றும், சோழ மன்னரின் வேலை முடிவுற்றதும், இடைதுறையானைப் பழி தீர்த்துக்கொண்டு, என் உயிரை மாய்த்துக் கொள்வதென்று சபதம் பூண்டேன். இந்தச் சபதத்தால் அன்று இடைதுறையான் தப்பிப் பிழைத்தான்.

"பகல் முழுவதும் சோழநாட்டிற்குப் பணிபுரிவதும், இரவு முழுதும் அரண்மனையின் இரகசியங்களை அறிவதிலும், இதற்கிடையே இடைதுறையானின் காமப்பசிக்கு ஆளாகியும் வந்தேன். என்னுடைய பணியினால் மேலைச் சளுக்கியரின் உதவி பெற்று, சோழநாட்டின் மீது படையெடுக்கத் திட்டம் தீட்டியிருந்ததைக் கைவிட்டுவிட்டான் இடைதுறையான். இன்னும் பல ஆண்டுகளுக்கு அவன் நம்மீது படையெடுக்க முடியாமல் செய்துவிட்டேன். இச்செய்தி சோழமன்னருக்கு எட்டியது. உடனே தஞ்சைக்கு வரும்படி உத்தரவிட்டார். நான் தஞ்சைக்கு வர விரும்பவில்லை. கணவரையும், குழந்தையையும் பார்க்க ஆவல்தான். ஆனால் என் கணவரை எப்படிப் பார்ப்பேன்? அதை நினைக்கும்போது என் நெஞ்சில் ஈட்டிகொண்டு குத்துவதுபோலிருக்கும்.

"அச்சமயம் இராசராசர் பாண்டியன் அமரபுசங்கன்மீது படையெடுத்துச் சென்றார். பாண்டியனுக்கு உதவியாக சேரனை பாஸ்கர இரவிவர்மன் சோழமன்னரை எதிர்த்தான். இச்சமயம் என்னுடைய பணி அதிக முக்கியமென்றும், உடனே வரும்படியும் எனக்கு மீண்டும் உத்தரவு அனுப்பினார் மன்னர். அதைத் தவிர்க்கமுடியாமல் நள்ளிரவிலே இடைதுறையானின் அந்தப்புரத்திலிருந்து வெளியேறினேன். நான் உடனே தஞ்சைக்கு வர பிரயாண வசதிகள் செய்யப்பட்டிருந்தது.

"நான் தஞ்சையை அடைந்ததும் வேவுப்படையினருடன் அரண்மனையிலேயே தங்கிவிட்டேன். என் அருமைச் செல்வி நந்தினியை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினேன். அந்த ஆள் வசம் என் கணவருக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினேன். அக் கடிதத்தில் இனி நான் அவருக்கு மனைவியில்லை யென்றும், அவருக்குத் துரோகமிழைத்துவிட்டதாகவும், அதனால் அவர் முகத்தில் விழிக்கவே தான் விரும்பவில்லை யென்றும், என்னை தேசத்திற்குச் சமர்ப்பித்துக் கொண்டதாகவும், எங்களின் காதல் சின்னமான நந்தினியை, இனி அவரே வளர்க்க வேண்டுமென்றும், அவர் விரும்பினால் வேறு ஒரு பெண்ணை மணந்துகொள்ளலா மென்றும், என்னை மறந்துவிடும்படியும் எழுதியிருந்தேன்.

"நந்தினியை அந்த ஆள் அழைத்து வந்தான். நான் படையுடன் புறப்படுவதற்கு இன்னும் மூன்று நாட்கள் இருந்தன. அது வரை நந்தினியை என்னுடனேயே வைத்துக் கொண்டேன். கடிதம் கண்டு என் கணவர் திடுக்கிட்டாராம். வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டு விட்டதாகவும், என் விருப்பப்படி வேறு பெண்ணை மணந்து வாழ அவர் விரும்பவில்லை என்றும், நந்தினியைக் காப்பாற்றி வளர்ப்பதே தன்னுடைய பெரும் பொறுப்பு என்றும் அதற்காகவே வாழ விரும்புவதாகவும் கூறினாராம். "என் அனுமதி கேட்டு, நானும் வற்புறுத்திய பிறகே அவள் வேவுப்படையில் சேர்ந்தாள். தவறு என்னுடையது தான். வேவுப்படையில் சேர்ந்த யாரும் ஒழுக்கத்துடன் திரும்பிய தில்லை. இதை அறிந்திருந்தும் கயல்விழியை அனுப்பி என் வாழ்வை அழித்துக் கொண்டேன்" என்றாராம் என் கணவர். அதன்பிறகு அவரைப் பிணி தொடர்ந்தது. அந்தப் பிணியே அவருடைய வாழ்க்கையின் முடிவாகவும் அமைந்து விட்டது.

மூன்றாம் நாள் நான் சேரநாட்டிற்குச் சென்ற சோழப் படையுடன் அனுப்பப் பட்டேன். சேரனுடைய உதவி பாண்டியனுக்குக் கிடைக்காமல் செய்வதே எங்களுடைய முழு நோக்கம். என்னுடன இன்னும் பல பெண்கள் வந்தனர். எல்லோரும் பல நாட்கள் பிரயாணம்செய்து கந்தளூர்ச் சாலையை அடைந்தோம். அங்கேதான் சேரனுடைய ஒரு பகுதிப் படை காத்திருந்தது. நாங்கள் அந்தப் படைவீரர்களுடன் தொடர்பு கொண்டோம். தவறான செய்திகளை அவர்களுக்கு அறிவித்தோம். அங்கு நிகழும் செய்திகளை சோழ மன்னருக்கு அனுப்பி வைத்தோம். ஆனால் சேரனுடைய படைகளைத் தடைசெய்ய, எங்கள் கற்பைச் சூறையாடவும் அனுமதித்தோம். எங்களுடைய சாகசச் செயலால் பாண்டியன் அமரபுஜங்கனை நமது மன்னர் வென்று, அவனைச் சிறைப்படுத்தினர்.

இந்நிலையில் தஞ்சையிலிருந்து ஒரு செய்தி கிடைத்தது. இடைதுறை அரண்மனையிலிருந்து தப்பி வந்த பிறகு, நான் சோழநாட்டின் வேவுக்காரி என்று அறிந்து, என்னை எப்படியாவது தூக்கி வந்துவிடும்படி இடைதுறையான் உத்தரவு பிறப்பித்திருப்பதாக அறிந்தேன்.

(தொடரும்)

ஜூன் 18!

நாடாளும் மன்னன் மகள் அவள்!

ஏடாளும் கவிஞன் அந்த இளைஞன்!

உறவு முற்றுகிறது! உண்மைக் காதல் அரும்பு விடுகிறது.

கண்ணதாசன்

எழுதும்

காதல் காவியம்

ராஜ தண்டனை

ஜூன் 18

தென்றல் இதழில் தொடங்குகி…

பெங்களூர் குறள் மாநாடு

- ★ இந்து மதம் தமிழன் மதமே அல்ல ! அது ஒரு கதம்பம்.
- ★ இஸ்லாம்போல கிறித்துவம்போல இந்து மதத்திற்கு மதநூல் இல்லை.
- ★ தமிழனுக்கு உருவமில்லாத ஒரே கடவுள்தான் !
- ★ ஜாதி சுயநலக்காரர்களால் ஏற்படுத்தப்பட்டது.
- ★ கொட்டையும் மொட்டையும் துறவறமாகாது.
- ★ பெங்களூர் குறள் மாநாட்டில் டாக்டர் மா. ராசமாணிக்கனாரின் புரட்சிகர மான பேச்சு.

புரட்சிக்கவிஞரின் ஆணித்தரமான பேச்சு, அன்பழகன் முழக்கம், டி. கே. சீனிவாசனின் சீரான பேச்சு, திருக்குறளார் நகைச்சுவை, புலவர் குழந்தை, பேராசியர் குண்டப்பா, கண்ணதாசன் பேச்சுக்கள்.

சரியாக காலை ஆறரைமணிக்கு நாங்கள் பெங்களூர்சேர்ந்தோம். இது வைகாசி மாதமாக இருந்தாலும் காலை ஆறரை மணிக்கு, பெங்களூரில் பெய்யும் பனி, மார்கழி மாதத்து சென்னைப் பனிக்கு சற்றேனும் குறைந்ததாக இல்லை. அப்போதே-அந்தக் குளிர் வேளையிலேயே குறள் மாநாடு நடைபெற்ற பிளாக் பள்ளி வட்டாரம் சுறுசுறுப்பாக இருந்தது. கருங்கல் கோட்டைச்சுவர்போன்ற மாநாட்டுப் பந்தலின் முகப்பலங்காரம், குறள் நாட்டார் விந்தியத்தின்விளிம்பிலே கட்ட இருக்கும் நுழைவு வாயிலை மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது. 14-ம் தேதி காலை மாநாடு குறிப்பிட்ட நேரத்தில் டாக்டர் மா. ராசமாணிக்கனார் தலைமையில் தொடங்கப் பெற்றது. கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், கனிநிகர் தமிழும் பேசிடும் திராவிடர்கள் சமுத்திரமென திரண்டிருந்தார்கள். முதல்நாள் மாநாட்டுத்தலைவர் டாக்டர் ராசமாணிக்கனார் தலைமை உரையிலும் முடிவுரையிலும் புரட்சிக் கருத்துக்களை கொட்டினார். தமிழனின் கடவுள் உருவமற்றது என்றும், ஜாதிப் பாகுபாடு சுயநலக்காரர்கள் வகுத்து வைத்தவை என்றும், கொட்டையும், மொட்டையும் துறவறமாகாது என்றும், இந்துமதம் தமிழன் மதமே அல்ல என்றும், அது ஒரு கதம்பம் என்றும், இஸ்லாம் போல, கிறித்துவம்போல இந்து மதத்திற்கு மத நூல் இல்லை என்றும் முத்துக் கோர்த்தாற்போல் புதுமைக் கருத்துக்களை அடுக்கடுக்காகச் சொன்னார். பந்தல் பெருமிதத்தில் மூழ்கியது. பேராசிரியர் இலக்குவனார், தி.பொ. வேதாசலம்,பேராசிரியர் குண்டப்பா ஆகியோர் பேசியபின் முதல்நாள் மாநாடு முடிவடைந்தது. இரவு, தோழர் ப. செல்வராசன் குழுவினரின் நாடகம் நடைபெற்றது.

இரண்டாவது நாள் மாநாடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் துவங்கியது. புதுவைச் சிறுத்தையின் அன்றைய புரட்சி முழக்கம் மைசூர் சமஸ்தானத்தையே அதிரவைத்து விட்டதெனலாம். வடநாட்டு ஸ்ரீ வல்லவன்தான் திருவள்ளுவராக இருக்க வேண்டுமென்ற வையாபுரியாரின் விசித்திர ஆராய்ச்சியைக் கண்டித்து புரட்சிக்கவிஞர் அவர்கள், வக்கீல் பட்டம் பெற்றுவிட்டால் தமிழ் மேதையாகிவிட்டோம் என்று கருதுகிறார்கள் சிலர் என்று பேசினார். அப்போது நகைப்பூட்டும் செய்தியொன்று மேடையில் நிகழ்ந்தது. மேடையில் அமர்ந்திருந்த திருக்குறள் முனுசாமி அவர்கள் "நானும் வக்கீலுக்குப் படித்தவனாயிற்றே என்னையுமா அப்படிச் சொல்லுகிறீர்கள் ?" என்று கேட்டார். அப்போது புரட்சிக்கவிஞர் "ஆம், உம்மையும் சேர்த்துத்தான்; நீர் தமிழிலே பேசும், ஆனால் தமிழுக்கு நான்தான் '**அத்தாரிடி**' என்று சொல்லாதீர்" என்று அடித்துப் பேசினார். உள்ளதை உள்ளபடி ஒலிக்கச் செய்யும் ஒலிபெருக்கி அந்த நேரத்தில் மேடையில் எழுந்த சிரிப்பொலியை பெரிதாக்கிக் காட்டத் தவறவில்லை. வள்ளுவர்படத்தை அலங்கரித்த மல்லிகை மாலையும் சற்று வேகமாக வீசிய குளிர்காற்றில் ஆடத்தான் செய்தது. கவிஞரின் தலைமை உரைக்குப் பிறகு கலைவாணர் என். எஸ். கே. யின் வில்லுப்பாட்டு தொடங்கியது. "**திராவிடமென்பது பாரினிலே உயர் செல்வத்திருநாடு**" என்று அவர் நிகழ்ச்சியை ஆரம்பித்தார்; அவ்வளவுதான்; புதிதாகக் கட்டிய பனைஓலைக்குடிசையில் பெருமழைத் துளிகள் விழுவதைப் போன்ற கையொலி எழுந்தது; ஒலித்தது; ஒலித்துக்கொண்டே இருந்தது இரண்டு நிமிட நேரம். சுவையும், புதுமைக்கருத்துக்களும் மிளிர, காந்தியாரின் கதையை கலைவாணர் பக்க மேளத்தோடு கூறி முடித்தார் அதன் பிறகு, பேராசிரியர் அன்பழகன், டி. கே. சீனிவாசன், புலவர் குழந்தை, கண்ணதாசன் ஆகியோர் பேசினர். முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பள்ளிப் படிப்பில் திருக்குறள் பகுதிகளை மென்மேலும் அதிகமாகச் சேர்க்க வேண்டும்.

2. தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பிரதேசங்களில் தமிழ்க் கல்விக்கு மைசூர் அரசாங்கம் அதிக வசதிகளைச் செய்து தரவேண்டும்.

3. மகான்களின் ஞாபகார்த்தமாக தபால் ஸ்டாம்புகள் வெளியிடும்போது திருவள்ளுவரின் உருவம் பொறித்த ஸ்டாம்புகளையும் இந்திய சர்க்கார் வெளியிட வேண்டும்.

4. ஒவ்வொரு வருஷமும் திருவள்ளுவரின் ஞாபகார்த்தமாக ஜூலை 26உ பொது விடுமுறை விட வேண்டும். ஜூலை கடைசி வாரத்தை "திருவள்ளுவர் வாரமாக" பொது ஜனங்கள் கொண்டாட வேண்டும்.

5. ஐ. நா. ஸ்தாபனம் மூலம் திருக்குறளை வேறு பல பாஷைகளில் மொழி பெயர்த்துப் பரப்புவதற்கு மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும்.

6. அரசாங்கச் சடங்குகளில் தமிழர்கள் திருக்குறளை கொண்டு விசுவாசப் பிரமாணம் எடுக்க வசதி செய்யவேண்டும்.

மாநாட்டின் சிறப்புக்கு தொண்டர்களின் ஒத்துழைப்பும் செயலாளர் ஜெயசீலனின் பேரார்வமுமே காரணமென்றால் தவறில்லை.

★ டில்லிக்கு சர்டிபிகேட் ★

அன்புள்ள வெற்றிமணி, நீ பரீட்சையில் தேறிவிட்டதாக கடிதமெழுதியிருக்கிறாய். மகிழ்ந்தேன் அதற்கு என்னுடைய பரிசாக ஒரு சிறு செய்தியை உனக்குத் தருகிறேன். 'டில்லிக்குப் போக வேண்டும், டில்லியைப் பார்க்க வேண்டும்' என நீ அடிக்கடி சொல்வாயல்லவா ! டில்லியின் நாகரீகத்தைப்பற்றி ஒருநண்பர் எழுதியிருக்கிறார், அதை உனக்குச்சொல்ல ஆசைப்படுகிறேன். தம்பி ! 'தமிழ்நாடு' பத்திரிகையைப் பற்றி உனக்குத் தெரியும். விஞ்ஞானத்தைப் பற்றியும் பிரமாதமாகஎழுதுவார்கள் அதே நேரத்தில் விபூதியின் மகத்துவம் பற்றியும் வர்ணிப்பார்கள். அத்தகைய பத்திரிகையின் நிருபர் ஒருவர் டில்லியைப்பற்றிய கட்டுரையொன்று எழுதியிருக்கிறார் சென்ற வாரத்தில். நீ அதை முழுக்க. முழுக்கப் படித்தால், இவ்வளவு நாற்றம் பிடித்தவர்களா நம்மைக் 'காண்டுமிராண்டி' களென்றார்கள் என்று நினைக்காமலிருக்கமாட்டாய். 'டில்லியை நாகரீகப்படுத்த வேண்டுமானால் டில்லியையே அழித்துவிட்டு புதுநகரம்தான் நிர்மாணிக்கவேண்டுமாம். அவ்வளவு (அ)சுத்தமாக இருக்கிறதாம் அந்தத்தலைநகரம். பெரிய சீமான் வீட்டுப் பெண்டுபிள்ளைகள்கூட தேவைப்பட்டதை வீட்டிலே சமைத்து உண்ணாமல் நடுத்தெருவிலே மோட்டாரைநிறுத்திகறியையும்,மீனையும் வாங்கிக்கொண்டு அந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுவார்களாம் சாப்பிடுவதற்கு. நான் எடுத்துக்கட்டிக் கூறவில்லை. மதுரை 'தமிழ்நாடு' இதழின் கட்டுரையாளரே கூறுகிறார். அவர் நம் இயக்கத்தைச் சார்ந்தவரல்ல; இன்னும் சொன்னால் அருள் நெறித் திருக்கூட்டத்தின் புகழ்பாடும் தின இதழின் விசேடநிருபர், அவரேசொல்லுகிறார் டில்லியின் 'பெருமை' குறித்து. அந்த நண்பர் டில்லியின் நிலையை உள்ளது உள்ளபடி சொல்லியதோடு மட்டுமல்லாமல்,நாற்றம் பிடித்த வடவரின் வண்டவாளங்களை விளக்கியதோடு மட்டுமல்லாமல், தன்னையும் அறியாமல் தன் சொந்தக் கருத்தையும் சொல்லிவிட்டிருக்கிறார். ஒரே நாடு ஒரே கலாச்சாரம் என்கிறார்களே, டில்லியின் கலாச்சாரம் இப்படி இருக்கிறதே என்று இடித்துக்கூடக் காட்டியிருக்கிறார். நேரில் கண்டறிந்து எழுதுபவர் டில்லிக்கு இப்படி 'சர்டிபிகேட்' தருகிறார். நீயோ, டில்லிக்குப் போக வேண்டுமென்கிறாய். போகலாம். நானும் வரமுயற்சிக்கிறேன். ஆனால் நாம் போகும்போது டில்லி நமக்கு தலைநகராக இருக்கக்கூடாது.

முடிமன்னன்

திருச்சி மாவட்ட தி. மு. க. அவசர செயற்குழு

கூட்ட அழைப்பு

[illegible]-5-55 ஞாயிறு காலை 10 [illegible]கு திருச்சி சிந்தாமணி தி. [illegible]க அலுவலகத்தில் மா[illegible] செயற்குழு கூட்டம் நடை[illegible] கீழ்கண்ட பொருள் [illegible] முடிவு செய்யப்படும். [illegible]ம் தவறாது வர கேட்[illegible]ப்படுகிறார்கள்.

[illegible] செயலாளர் வர [illegible]நில மாநாட்டு [illegible]குழு

சேலம் தி. மு. க.

22-5.55 மாலை 6-30 மணிக்கு சேலம் வி. மார்க்கெட் மைதானத்தில் சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

சேலம் மாவட்டம் தி. மு. கழகம்

வெண்பாப் போட்டி

7 பூவைமே லெத்தனைப் பூ!

வெண்பாப்போட்டி 7-ன், பரிசுபெற்ற வெண்பாக்களும், பிர சுரத்திற்கு தகுதியுடைய வெண்பாக்களும் சென்ற இதழ்களில் பிரசுரமாயின; தகுதியுடையன சிலவற்றை இந்த இதழிலும் வெளியிட்டுள்ளோம்.

கொல்லும் பசிகொல்ல கொள்கை நெறிகொல்ல
வெல்லும் வகைமுயல்வோன் வீணனெனும்--தொல்லுலகில்
நாவை மதித்தறியா நாற்பண்பை காத்தறியா
பூவைமே லெத்தனைப் பூ!

—ல. சேதுராமன், கரூர்.

★

காவியப்பூஞ் சோலையிலே பூத்த கருத்துமணம்
மேவியபூ வெல்லாம் விளம்புவதை--ஓவியன்செய்
ஓவியப்பெண் சொல்வாள் உறுப்புகளால்; ஆகா! அப்
பூவைமே லெத்தனைப் பூ!

—ச. சீத்தாராம் (சீரான்), கோம்பை.

★

முல்லை நகையு முகத்தா மரைவிழியும்
அல்லி கனதன மம்புயமே--மெல்லிமலர்க்
காவே கழற்கரங்கள் கன்னித் தமிழ்நாட்டுப்
பூவைமே லெத்தனைப் பூ!

—தமிழ்ச்செல்வம், குன்னூர்.

★

நீலத் துகிலுடுத்தி நின்றாடும் நற்றமிழாள்
கோல மதிமுகத்தைக் கொண்டுவிட்டாள்--வாலைமிகு
பாவை புலவர்தம் பாட்டைத் தழுவுதமிழ்
பூவைமே லெத்தனைப் பூ!

—மு. சிவகுருநாதன், கீரப்பாளையம்.

★

கோங்கரும்பு கொங்கைக் குளிர்முல்லைப் பற்கள்கண்
பூங்குவளைப் பூமுகமாம் வாய்அல்லி--தேங்குஞ்செங்
கோவைமேல் மூக்கூன்றும் கிள்ளாய்! நினதுமொழிப்
பூவைமே லெத்தனைப் பூ!

—இரா: சிவஞானவள்ளல், சுப்பிரமணியபுரம்,

★

பொன்முறுவல் பூக்கும்பூ பொற்பாம் பருவத்தில்
கன்னிப்பூ நெய்தட்பூ கண்ணுகும்--நன்னடைக்கு
தேவையாம் கற்பு சிறுங்காது வள்ளையாம் 'ஆ'
பூவைமே லெத்தனைப் பூ!

—தி. சா. தேவராசன், சென்னை 12.

★

வான்முகத்துத் தாமரைப்பூ தேன்பருக வந்தவண்டு,
கான்முல்லை பல்லெயிற்றுக் கள்ளுண்டு--மாண்புறுங்கால்
பாவைக்கை காந்தள்பூ தாவிப் பிணைந்ததுவே,
பூவைமே லெத்தனைப் பூ!

—அ. திங்கள்கொண்டான், கடலூர் புதுநகர்.

★

மண்ணில் விளையாமல் மாசற்று மாண்புற்று
தன்னில் நிகரில்லாத் தன்மையுடன்--என்னாளும்
சாவா மணங்கொண் டதுவாய்; தமிழணங்காம்
பூவைமே லெத்தனைப் பூ!

—கா: சண்முகவேலு, திருச்சுழி.

★

காவி மலர்க்கண்கள் கள்ளுமிழும் செவ்விதழ்கள்
வாவியில் பூத்த மலர்மேனி--ஓவியப்
பாவை எழில்மறைக்கப் பாராய்நீ! வண்ணமலர்
பூவைமே லெத்தனைப் பூ!

—வைப்பூதரக்கவி கே. ஆர். வைத்திலிங்கம், வையப்பமலை.

தாமரை போன்றமுகம், தீங்குவளைக் கண்கள்
நாமணக்கும் தேனிதழ்கள், காந்தட்கை--பூமனத்தான்
ஓவியத்தால் மார்பிற்பூ, கூந்தலிற்பூ, ஒண்டொடியிப்
பூவைமே லெத்தனைப் பூ!

—மு. சீ. வெங்கடாசலம், பி. ஏ. முருங்கப்பட்டி.

★

ஒண்முகம் செங்கமலம்! வெண்முல்லை வாலெயிறு
கண்குவளை! மென்விரல் செங்காந்தள்--பண்ணெழுகு
பாவைக் குமுதவாயாற் பாடி எனைக்கவர்ந்த
பூவைமே லெத்தனைப் பூ!

—சு. இராமமூர்த்தி, கோவை

★

விழியிரண்டும் நீலம்பூ வாயிதழ்கள் காணு
எழிற்பூ, விரல்கள் எருக்கம்பூ--சூழ்தேனுள்
பாவைநிறம் தாழம்பூ, பல்லெல்லாம் வாழைப்பூ,
பூவைமே லெத்தனைப் பூ!

—ஞ. காளத்திநாதன், சென்னை 7.

★

கருவண்டு சூழக் கருங்குவளை பூத்து
அருங்குமிழ் வள்ளையொ டாம்பல்--மருவிய
பாவையின் செந்தா மரைமுகம்! காந்தள்கை!
பூவைமே லெத்தனைப் பூ!

—கண்ணரசு, கோவை.

★

சங்க இலக்கியங்கள் சாற்றுமுயர் நுண்பொருளாம்
மங்கலஞ்சால் மென்பூ மலரணிந்த--பொங்குபுகழ்
பாவை மொழிமுதல்வி பார்முடிமூ வேந்தருயிர்ப்
பூவைமே லெத்தனைப் பூ!

—வி: ப. கோவிந்தசாமி, சென்னை 12.

★

வள்ளுவனார் தாம்வகுத்த வையத் திருமறையாம்
தெள்ளுதமிழ் பூக்காட்டில் திண்தோளா--கள்ளவிழ்தார்
கோவை இதழ்ச்செல்வி கோமூவர் நெஞ்சமர்ந்த
பூவைமே லெத்தனைப் பூ!

—முருகதாசன், சென்னை 12.

★

போவாள் வருவாளோ; புன்முறுவல் பூவாளோ;
காவாளோ கண்பூக்க நான்பார்க்க--ஏவாளோ
பூவைக்க; அன்பாசை பூக்குதின்னும் இன்பம், ஆ!
பூவைமே லெத்தனைப் பூ!

—வீ. பாலசுந்தரம், அருப்புக்கோட்டை.

★

பொற்றகாடிமு கத்திற்குப் பூதாம ரைஉவமை
சிற்றிடையார் கட்டுகிற சேலையில்--எற்றும்தான்
தேவை இலாப்பூ தெரிவைத லையிற்பூ
பூவைமே லெத்தனைப் பூ!

—சித. நாச்சியப்பன், காரைக்குடி.

★

தாமரையே மாமுகமாய்த் தண்குவளைக் கண்ணிணையாய்க்
காமரையே வெல்லுங் களிநகையே--யாமரும்பே
பாவையாள் கைகளுமாய்ப் பைங்காந்தள் பாரிலிப்
பூவைமேல் எத்தனைப் பூ!

—சுந்தரமூர்த்தி, நாமக்கல்.

வேண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 9

ஈற்றடி: "இல்லையோ வெங்கட் கிடம்"

முடிவு தேதி 28-5-55

நீதிபதி: 'சகி' 'தென்றல்' சென்னை-6.

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ.எல்.டி.

பதில் தருகிறார்

சு. த. சுப்பிரமணியம்,
திருநெல்வேலி.

கல்லாடம் கற்றவனிடம் சொல்லாட முடியாது என்ற முதுமொழி உள்ள கல்லாடம் நூல் ஆசிரியர் யார்? எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

கல்லாடநூல் ஆசிரியர் கல்லாடர்: நூல் சைவ சமயத்துறையில் வகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளில் இடம் பெற்றுள்ளது. சங்க காலத்திலும் கல்லாடர் என்ற ஒரு புலவர் இருந்தார். ஆயினும் கல்லாடம் பாடிய கல்லாடர் சங்க காலத்தில் இருந்தவர் அல்லர். தேவார காலத்திற்குமுன் இருந்தவர். இரண்டுக்கும்இடைப்பட்ட 5 அல்லது 6 வது நூற்றாண்டில் அவர் வாழ்ந்திருக்கக்கூடும்.

மோ. நாசிம்மன்-இளம்பிள்ளை.

'' தெய்வம் தெளிமின்
தெளிந்தோர்ப் பேணுமின்''

என்ற சொற்றொடர் சிலப்பதிகாரத்தில் எவண் கையாளப்பட்டுள்ளது? இச்சொற்றொடரை இளங்கோவடிகள் எப்பொருள் கொண்டு அமைத்திருப்பார்? இச்சொற்றொடரிலிருந்து நாம் அறிவதென்ன?

சிலப்பதிகாரம் முப்பதாவது வரந்தரு காதையின் இறுதி அடிகள் இவை (அடி 187). இலங்கைக் கயவாகுமன்னன் மாளவ மன்னன் குடகக்கொங்கர், சிறை விடுதலை பெற்ற ஆரிய மன்னர் ஆகிய அனைவரும் கண்ணகியின் சிலையை வணங்கி வரந்தரவேண்ட,'கண்ணகி உருவம் அவர்கள் முன் தோன்றி நல்லுரை கூறிற்று. அந்த நல்லுரையே 'தெய்வம் தெளிமின்' முதலிய அடிகள். ''தெய்வத்தினுடைய தன்மை இன்னது என்பதை அறிவு நூல்கள் உதவியாலும் ஆராய்ச்சியாலும் தெளிவாக உணருங்கள்; அத்துடன் அவ்வாறு உணர்ந்தவர்களை மதித்து பின்பற்றுங்கள்'' என்பது அடியின் பொருள்.

இளங்கோவடிகள் எல்லாச்சமயக் கருத்துக்களையும் அவ்வச்சமயத்தார் வழிநின்று நாடகப் பண்பு கெடாமல் குறிப்பவர். இந்த இடத்தில் கண்ணகி கூற்றாக அவர் தன் ...த்தையே குறிக்கிறார் எனலாம். ...ள் தன்மையைப் பல சமயத் ... பலவாறாகச் சொன்னாலும் ...ந்து பொதுப்பண்பு கண்டு ... உண்மைத் தன்மையை ...வேண்டும் என்று இங்கே ...றிக்கிறார். அந்தப் பொதுத் ... ஒழுக்க வாழ்விலேயே ... என்று இளங்கோவடிகள் கருதியதினால் இந்த அடியைப் பின்பற்றி அவர் கருத்துப்படி ஒழுக்க முறைகள் எவைஎன்று கூறியுள்ளார்.

'பொய்யுரை அஞ்சுமின்' என்பது முதல் 'செல்லும் தே எத்துக்கு உறுதுணை தேடுமின்' என்பது வரை இவ்வொழுக்க முறை கூறப்படுகிறது.

இராமகிருஷ்ணன், மதுரை.

'' அருளில்லார்க்கு அவ்வுலகம்
இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகியாங்கு ''

இக்குறளில் வந்துள்ள '' அவ்வுலகம், '' ''இவ்வுலகம்'' பொருள் யாது? விளக்கம் தருக.

அவ்வுலகம் என்பது புகழுலகம், அறிவுலகம், வருங்கால உலகம் என்ற மூன்று கருத்துக்களையும் சுட்டுவது. இவ்வுலகம் என்பது உடனடியாக அடுத்துள்ள சூழலைக் குறிப்பது. சாக்ரட்டீஸ், ஏசுபெருமான் முதலியோர் வாழ்க்கை இதற்குச் சான்று. அவர்கள் கால அவ்வுலகு' அதாவது 'இவ்வுலகு' கடந்து அவர்கள் கால அறிவுலகிலும் பிற்காலப் புகழுரையிலும் அவர்கள் பெருமை அறியப்படுகிறது.

ல. பிச்சை, மணப்பாறை.

நம்நாட்டுச் சிறுவர் வரலாறுகளில் சிபிச்சக்ரவர்த்தி புறுவுக்காக தன்னுடல் முழுவதையும் அறுத்துக் கொடுத்தான். எலும்புகள் தாம் பாக்கி. கடைசியாக தராசில் தானும்உட்கார எடை சரியாயிற்று. என்று இருக்கிறதே அவ்வளவு தசைகள் அறுத்தால் ஆள் அப்படியே இருக்கமுடியுமா? இதைப்போல் எத்தனையோ நம்பமுடியாததை நம்பவைக்க குழந்தைகளுக்கு கற்பிக்க பாடத்திட்டம் இருக்கிறதே இதையெல்லாம் திருத்த நம் கழகம் வழி வகுக்காதா?

குழந்தைக் கதைகள் குழந்தைகளின் இயல்புக்கேற்ப சுவை தருபவை. குழந்தைகளின் சட்டைகள், அவர்கள் உடல் வளர்ச்சி உற்றபின் எறியப்படுவதுபோல, குழந்தைக் கதைகளும் அவர்கள் அறிவு வளர்ச்சி அடைந்தபின் அவர்களால் கைவிடப்படுபவை. அவை வளர்ந்தவர்கள் ஆராய்ச்சிக்குரியது அல்ல.

குழந்தைகளுக்கு இயற்கைக்கு மாறுபட்டதைக் கதைமூலம் புகுத்துவது தவறு. ஆனால் அவர்கள் அறிவுவளர்ச்சிக்கு கெடுதல் செய்யாத புனைந்துரைகள் அமையலாம்; சில சமயம் வளர்ச்சிக்கு உதவவும் செய்யலாம். குழந்தைப் பண்பு ஆராய்ச்சியாளர் கவனிக்க வேண்டிய செய்தி இது.

க. வில்லடியான், மதுரை.

சங்க இலக்கியங்களின் வான ஆராய்ச்சி பற்றிய நூல்கள் இருந்தனவா? விளக்கம் தரவேண்டுகிறேன்.

சங்க இலக்கியம் இலக்கிய ஏட்டுத்தொகுதி மட்டுமே. அதுவும் பல துண்டுகளின் திரட்டேயன்றி அக்கால முழு இலக்கியமோ முழு ஏட்டுத் தொகுதியோ அல்ல. இந்நிலையில் வானநூலை அவற்றிடையே தேடமுடியாது. அக்காலத் தமிழர்களின் வானநூல் அறிவு இன்றைய மேனாட்டு அறிவைவிட மிகவும் பிற்பட்டதல்ல என்பதைக் காட்டும் பாடல்கள் சங்க இலக்கியத்தில் உண்டு. மேலும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் கொடுத்த வானநூல் குறிப்பைக் கொண்டு கதைப் போக்கில் செய்திகள் நிகழ்ந்த காலத்தையெல்லாம் கணித்து அளவிட்டுக் கூறியுள்ளார். வானநூற் பயிற்சி சங்க காலத்தில் இருந்து அடியார்க்கு நல்லார்காலம் வரை தொடர்ந்து இருந்தது என்பதை இது காட்டுகிறது.

தமிழரின் அறிவராய்ச்சி நூல்கள் எவையும் தமிழிலேயே நமக்கு வந்து எட்டவில்லை. எட்டிய அளவிலும் சித்தர் மருந்துவ நூல்கள் இன்னும் புறக்கணிக்கப்பட்டு, அரசியல் ஆட்சியாளரால் மறக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் வானநூல் அறிவு பற்றி 'சிலேட்டர்' என்ற மேனாட்டு அறிஞர் 'இந்திய நாகரிகத்தில் திராவிடப்பண்பு, என்ற நூலில் விளக்கி உள்ளார். ஆரியர் வானநூல் அறிவு, கிரேக்கர் வானநூல் அறிவு, ஆகியவற்றைத் தாண்டி தமிழர் உயர்ந்த பயிற்சியும் அறிவும் உடையவராய் இருந்தனர்என்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார். ஆரியர் முறை, தமிழர் வானநூல் அடிப்படையான கணிப்பைப் பின்பற்றி அரைகுறை வழுவுடன் அமைந்ததே என்பதையும் தமிழர் முறை இன்னும் அவ்வழுக்களைத் திருத்தத்தக்க அளவு சீரியது என்றும் அவர் கூறுகிறார்.

எடுத்துக்காட்டாக, ஞாயிறு வட எல்லை, தென்எல்லை, செல்லும் கோடி நாட்கள்(சங்கராந்தி) ஆரியர் கணிப்பில் இருபதுநாள் தவறுதலாக இன்னும் உள்ளது. இதை நேரே வானை நோக்கித் தெரிந்து கொள்ளலாம். தமிழர் இன்று கொண்டாடும் சங்கராந்தி (பொங்கல்) தமிழர் கணிப்புப்படி உண்மையில் கிட்டத்தட்ட தை 20-ம் தேதியில் நிகழ்வதேயாகும்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆந்திராவில் ஏற்பட்ட சம்பவத்தை சாக்காகக் கொண்டு ஒரு கோஷ்டியாரை மற்ற கோஷ்டியார் பரஸ்பரம் ஒழிக்கத் துணிந்துள்ளனர். மதுரையிலிருந்ததுபோலவே இரு கோஷ்டிகளும் சபலம் பெற்று இன்றும் விளங்குகின்றன. ரணதேவைப் பின்பற்றும் தீவிர இடதுசாரிகள் ஏதாவது ஒருபக்கம் சாய்ந்தாலொழிய இரு கோஷ்டியினரின் திராணி சமநிலையிலேயே இருந்து வரும். ஆந்திரத் தலைவர்களில் சிலர் நாட்டிலே குழப்ப நிலையை உண்டாக்கும் போக்குக்கு மீண்டும் திரும்பலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பது இந்த சந்தர்ப்பத்தில் மறக்கக்கூடியதல்ல. அந்த எண்ணம் ரணதேவ், அவர்களைத் தகுந்த சமயத்தில் ரட்சிக்கவேண்டி செல்லவேண்டிய தூண்டுகோலாயமையலாம்.

இன்றைய சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகள் ரணதேவின் தீவிர கொள்கை முறைக்கோ அல்லது அதனை யொத்த ஓர் முறைக்கோ தங்களைத் தயார்படுத்திக்கொள்வார்களென்பது நினைக்கக் கூடியதாயில்லை. எவ்வளவுதான் தீவிரமாக அவர்கள் செல்வதாக நேர்ந்தாலும், அந்தத் தீவிர போக்கு நோக்கி மெள்ள மெள்ள செல்லவேண்டிய காலகட்டம் தீர்மானிக்கப்படலாம்; ரகசிய (அண்டர் கிரவுண்டு) இகக்கத்தைக் கட்டிக் காப்பதில் அதிக கவனம் செலுத்தக்கூடும். தீவிரமாகச் செல்லவேண்டுமென்ற ஆத்திரம் தொடர்ந்திருக்கும் பட்சத்தில், அடுத்த பொதுத்தேர்தலில்,சென்றபொதுத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வகையில் கலந்துகொண்டது போன்று கலந்துகொள்வது உறுதியில்லை; ஒப்புக்காக இங்கொன்றும் அங்கொன்றுமாக சில ஸ்தானங்களில் அவர்கள் போட்டியிடலாம். அப்போதே கம்யூனிஸ்டுகளின் சட்டசபையில் பிரவேசித்துக் காரிய மாற்றும் தோற்றம் அஸ்தமிக்கும். போட்டி மனப்பான்மையும் உட்பூசலும் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் அரசியல் செல்லாக் காசுகளாவர். அதன்பின்' கோட்டைக்குள் குத்து வெட்டு' என்ற அவல நிலைக்கு இந்திய கம்யூனிஸ்டு தோழர்கள் ஆளாகலாம்.

கதிரன், பி.ஏ.

★

ஆதாரம்: டில்லி வாரப்பத்திரிகை ''தாட்டில்'' வெளியான ஜி. எஸ். பார்கவா என்பாரின் அரசியல் கருத்துரை.

◉

முக்கிய அறிவிப்பு

தென்றலுக்கென புதிய அச்சு இயந்திரம் வந்திருந்திருக்கிறபடியாலும், வெளி அச்சகத்தில் கொடுப்பதில் தாமதமும், தொல்லைகளும் ஏற்படுவதாலும் இந்த இதழ் மட்டும் 'தென்றல்' எட்டுப் பக்கங்களோடு வெளிவருகிறது. அடுத்த இதழ் வழக்கம்போல பனிரெண்டு பக்கங்களோடு வெளிவரும்.

ஜுன் 18ம் தேதிய இதழ் முதல் 'தென்றல்' பொலிவு மிகப் பெற்று பல புதிய அம்சங்களோடு வெளிவரும்.

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed ... R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.